

நெல்லை மாவட்டம் இராதாபுரம் வட்டம் பணகுடி எம்.எம்.பி.மகாலில் நடைபெற்ற நிகழ்வில் பணகுடி பகுதியில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் கட்டப்பட்டு வரும் குடியிருப்புகளில் பயனாளிகளுக்கு வீடு ஒதுக்கீட்டுக்கான தற்காலிக ஆணைகளை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு மாவட்ட வருவாய் அலுவலர் மு.துரை முன்னிலையில் வழங்கினார்.



அருப்புக்கோட்டை நகராட்சி சார்பில் 20.59 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய பேருந்து நிலையத்தை அமைச்சர் கே.என்.நேரு, அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் ஆகியோர்கள் திறந்து வைத்தார்கள். உடன் சட்ட மன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், அசோகன், தங்கப்பாண்டியன், சிவகாசி மேயர் சங்கீதா இன்பம், அருப்புக்கோட்டை முன்னாள் சேர்மன் சுப்புராஜ், சிவப்பிரகாசம், தலைமை செயற்குழு உறுப்பினர் சாகுல் ஹமீது, செட்டிக்குறிச்சி பிராபகரன், அருப்புக்கோட்டை நகர்மன்றத் தலைவர் சுந்தரலட்சுமி, ரெகுராமன், நகரச் செயலாளர் ஏ. கே.மணி, இளைஞர் அணி துணை அமைப்பாளர் பாபுஜி, நெசவாளர் அணி பழனிச்சாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.




விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் 'தமிழகம் தலைகுனியாது' என்ற தலைப்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தமிழக பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். உடன் ஒன்றிய செயலாளர் மல்லி ஆறுமுகம், நகரச் செயலாளர் அய்யாவு பாண்டியன் ஆகியோர் இருந்தனர்.




நெல்லை மேற்கு மாவட்டம் அம்பாசமுத்திரம் நகர தி.மு.க சார்பில் ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.வையும், துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது.நிகழ்வில் நகர செயலாளர் பிரபாகரன் உள்பட கழக நிர்வாகிகள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



1 கோடியே 36 லட்சம் மகளிருக்கும் உரிமைத் தொகையாக ரூபாய் 5000/= அவரவர் வங்கி கணக்கில் போடப்பட்டுள்ளதை முன்னிட்டு திண்டுக்கல் மாநகரில் கிழக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் மாவட்ட செயலாளர் இ.பெ.செந்தில்குமார் தலைமையில் மாநகரச் செயலாளர் ராஜப்பா, நேர் இளமதி ஜோதி பிரகாஷ், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், வெள்ளிமலை மற்றும் மகளிர் கழக நிர்வாகிகள் திரளாக பெண்களுக்கு உழைக்கும் மகளிர்க்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.



தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில் நகர தி.மு.க. சார்பில் ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.வையும் துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் சங்கரன்கோவில் தபால் நிலையம் முன்பு முட்டையை கையில் ஏந்தி தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது.நகர செயலாளர் மு.பிரகாஷ் வரவேற்றார்.நிகழ்வில் மாவட்ட பொருளாளர் இல.சரவணன், பொதுக்குழு உறுப்பினர் மகேஸ்வரி, உள்பட கழகத்தினர் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




காரியாபட்டி அருகே வக்கணாங்குண்டு கிராமத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம்தென்னரசு நலத்திட்ட உதவிகள் வழங்கினார் .






மதுரையில் வருகிற 21ஆம் தேதி நடைபெற உள்ள தென் மண்டல பி.எல்.ஏ. 2, பி.எல்.சி. மற்றும் பி.டி.எ. முகவர்கள் பயிற்சி மாநாடு தொடர்பாக வடக்கு மாவட்ட தி.மு.க. கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் உத்தங்குடி கலைஞர் திடலில் நடைபெற்றதில் மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமை வகித்து சிறப்புரை ஆற்றினார். மேலும் இக்கூட்டத்தில் கழக நிர்வாகிகள் விஜய கதிரவன், அ.பா.ரகுபதி, சிறைச்செல்வன், மதிவாணன், ஹக்கீம், நேரு பாண்டியன், பெ.சசிகுமார், மருது பாண்டியன், கௌரி சங்கர், பாண்டியராஜா, கலை கார்த்திகேயன், வீரராகவன், எம்.இளங்கோ, ஆதிசங்கர், அண்ணாமலை, ஒத்தக்கடை சரவணன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் பங்கேற்றனர்.





திருச்செந்தூர் வட்டம் சண்முகசுந்தரம் மேல்நிலைப்பள்ளி ஆத்தூர் பேரூரில் மாணவ – மாணவியர்களுக்கு விலையில்லா சைக்கிள்களை மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் வழங்கினார். உடன் ஒன்றிய கழக செயலாளர் ஏ.பி. சதீஷ்குமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், விளையாட்டு மேம்பாட்டு அணி ஜனகர், வழக்கறிஞர் அணி கிருபாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




தேனி வடக்கு மாவட்டம் வீரபாண்டி பேரூர் பகுதியில் பா.ஜா.க.வுக்கு துணை போகும் அ.தி.மு.க.வை கண்டித்து வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்பி தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது தெற்கு ஒன்றிய செயலாளர் ரத்ன சபாபதி வடக்கு ஒன்றிய செயலாளர் சக்கரவர்த்தி. பேரூர் செயலாளர் செல்வராஜ் பேரூராட்சி தலைவர்கள் கீதா சசி. மிதின் சக்கரவர்த்தி . மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் விஜயகுமார் மற்றும் தோழமைக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.